# அறிவித்தல் A

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட “**அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்**” எனும் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீதான உயர் நீதீமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சட்டமூலத்தில் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 19, 20, 21, 22, 23, 26, 27, 28, 29, 30, 32, 34, 35, 36 மற்றும் 37 ஆம் பிரிவுகள், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விசேட பெரும்பான்மை வாக்குகளினாலும் மற்றும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேலும் அரசியமைப்பின் 82 (5)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலத்தின் 17, 18, 24, 25, 31 மற்றும் 33 ஆம் பிரிவுகள் விசேட பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றிக் கொள்ள முடியுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.